3. சட்டமன்ற விதி 82-ன் கீழ் முதலமைச்சரின் விளக்க உரைகள்—தொடர்ச்சி.

(2) இரண்டாவது சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைகளிலுள்ள முரண்பாடுகளைப்பற்றி ஆராய்ந்து தனி நபர்க்குழுவின் அறிக்கை மீது அரசு முடிவுகள் குறித்து.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேலவை விதி 82 இன் கீழ் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளையொட்டி அரசு எடுத்த முடிவுகளில் தென்பட்ட முரண்பாடுகளைப் பற்றி ஆராய தனி நபர் குழு ஒன்றை அரசு நியமித்ததை உறுப்பினர்கள் அறிவர். அண்மையில் அக்குழு சமர்ப்பித்த அறிக்கையினையும், பல்வேறு அலுவலர் சங்கங்கள் கொடுத்த விண்ணப்பங்களையும் அரசு ஒருசேர ஆய்வு செய்தது. அதையொட்டி அரசு எடுத்த முடிவுகளை அறிவிக்க விரும்புகிறேன்.

2. பட்டதாரி ஆசிரியர்களது சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 275-10-375-15-450 என்பதிலிருந்து ரூ. 300-10-350-15-500 ஆக மாற்றி உயர்த்தப்படும். (ஆரவாரம்) இதனையொட்டி, நேர்முகத் தேர்வுக்குப் பட்டப்படிப்பு தகுதியாக அமைந்துள்ள, முதுநிலை கூட்டுறவு ஆய்வாளர், காவல்துறை, சப்-இன்ஸ்பெக்டர்கள், தலைமைச் செயலக உதவியாளர்கள், மொழிபெயர்ப்பு உதவி யாளர்கள் ஆகியோர் சம்பள விகிதங்களும் தற்போதுள்ள ரூ. 275-10-375-15-540 என்பதிலிருந்து ரூ. 300-10-350-15-500 ஆக மாற்றி உயர்த்தப்படும். இந்த உயர்வினால் பட்டதாரி ஆசிரியர் 25,000 பேர் உட்பட 31,000 பேர் பயன் பெறுவர்.

3. கால்நடை உதவி மருத்துவர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 400-15-475-20-575-25-650 என்பதிலிருந்து ரூ. 425-20-525-25-700 என மாற்றி உயர்த்தப்படும். அதன் பயனாக ஏறத்தாழ 900 பேர் பயனடைவர்.

4. இளம் பொறியாளர்கள் சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 400-15-475-20-575-25-650 என்பதிலிருந்து ரூ. 425-20-525-25-700 என மாற்றி உயர்த்தப்படும். இதன் விளைவாக ஏறத்தாழ 1,900 பேர் பயன் பெறுவர்.

1972 ஆகஸ்ட் 18] [டாக்டர் மு. கருணாநிதி]

5. இளநிலை உதவியாளர்கள் சம்பள விகிதங்கள் தற்போதுள்ள ரூ. 200-5-250-10-300 என்பதிலிருந்து ரூ. 210-5-245-10-325 என மாற்றி உயர்த்தப்படும். இதன் பயனை ஏறத்தாழ 30,000 பேர் அடைவர்.

6. தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் உதவியாளர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 250-10-400 என்பதிலிருந்து ரூ. 250-10-300-15-450 என மாற்றி உயர்த்தப்படும். இதனால் ஏறத்தாழ 13,000 பேர் பயன் பெறுவர்.

7. தலைமைச் செயலகம் தவிர்த்த பல்வேறு துறைகளில் பணியாற்றும் கண்காணிப்பாளர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 350-15-500-20-600 என்பதிலிருந்து ரூ. 350-15-425-25-600 என மாற்றியமைக்கப்படும். இதன் பயனாக ஏறத்தாழ 1.100 பேர் பயன் அடைவர்.

8. வருவாய்த் துறையின் கீழ்வரும் கிராம அதிகாரிகள் ஊழியர்கள் மதிப்பூதியம் (honorarium) மாதமொன்றுக்கு ரூ. 7 வீதம் உயர்த்தப்படும். மொத்தம் 54,000 பேர் இதன் பயனை எய்துவர்.

9. இடைநிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் சம்பள விகிதம் தற்போதுள்ள ரூ. 225-5-250-10-350 என்பதிலிருந்து ரூ. 250-10-400 என மாற்றி உயர்த்தப்படும். இத்துடன் தேர்வுநிலை ஆசிரியர்களிடமிருந்து தலைமையாசிரியர்களை வேறுபடுத்திக்காட்ட சிறப்பூதியமாக மாதம் ரூ. 15 அளிக்கப்படும். இதனால் 4,900 தலைமை ஆசிரியர்கள் பயனடைவர்.

10. சம்பள விகிதங்கள் தற்போது மாற்றியமைக்கப்படும் பதவிகள் தவிர்த்த, மற்ற பதவிகளில் புதிய விகிதங்களில் சம்பளத்தை நிர்ணயிக்கும் முறை மாற்றியமைக்கப்படும். இதன்படி, பழைய பணிக் காலத்திற்கு இரண்டு, இரண்டு, மூன்று, மூன்று ஆண்டுகள் பணிக்கு ஒரு உயர்வு வீதம் என நான்கு உயர்வுகளுக்கு மேற்படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும். கடைநிலை ஊழியர்களைப் பொறுத்தவரை, ஒவ்வொரு இரண்டாண்டுக்கும் ஒரு உயர்வு எனக்கொண்டு, ஐந்து உயர்வுகளுக்கு மேற்படாது சம்பளம் நிர்ணயிக்கப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

இவை தவிர, தனி நபர் குழு சொல்லியுள்ள பல்வேறு பரிந்துரைகள்மீது அரசு விரைவில் ஆய்வு செய்து ஆணைகள் பிறப்பிக்கும்.

இச் சலுகைகள் வரும் செப்டம்பர் திங்கள் முதல் தேதியிலிருந்து செயல்படுத்தப்படும். எனினும் சம்பள விகிதங்களைக் கணக்கிடுவதற்கு 2—10—1970 அடிப்படைத் தேதியாக கொள்ளப்படும்.

தனிநபர்குழு பரிந்துரைகள் உள்ளிட்ட இச்சலுகைகளின் விளைவாக தற்போது ஆண்டொன்றுக்கு நான்கு கோடி ரூபாய் கூடுதல் செலவும், இறுதியில் ஆண்டொன்றுக்கு ஐந்தரைக் கோடி ரூபாய் கூடுதல் செலவும் ஆகும். தற்போதுள்ள நிதிநிலை நெருக்கடியில் அரசு மனமுவந்து அளித்துள்ள இச்சலுகைகளை அனைவரும் வரவேற்றிடுவீர் என்றும், இந்த அவை தனது ஆதரவை நல்கும் என்றும் நம்புகிறேன். (ஆரவாரம்).

5. அரசுத் தீர்மானம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவுக்கு ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தல் குறித்து.

மாண்புமிகு திரு. மன்னை ப நாராயணசாமி: தலைவரவர்களே, " தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழுவில் உறுப்பினராக இருந்த திரு. பி. நாராயணசாமி தம் உறுப்பினர் பதவியை விட்டு விலகிவிட்டதால் ஏற்பட்டுள்ள காலியிடத்தை நிரப்புவதற்காக மாண்புமிகு மேலவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இம்மன்றம் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க, தமிழ் நாடு 1971 ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 8/1971) 18-வது பிரிவு (2) உட்பிரிவில் " பிரிவு II -பிற உறுப்பினர்கள்" எனும் தலைப்பின் கீழுள்ள (h) பகுதியின்படி முற்பட வேண்டும்". என்ற தீர்மானத்தை நான் முன்மொழிகின்றேன்